2012 ஏப்ரல் 12]

உயிர் உரங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், விலை குறைந்ததாகவும் உள்ள காரணத்தினால், தமிழகத்தில் உள்ள 15 உயிர் உர உற்பத்தி மையங்கள்மூலமாக 3,850 மெட்ரிக் டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.*

திரு. துரை. மணிவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் தொகுதி, அரியலூர் ஒன்றியம், திருமானூர் ஒன்றியம் போன்ற பகுதிகளில், அதிக விவசாயிகள் கரும்பு சாகுபடியைக் குலத் தொழிலாக செய்து கொண்டிருக்கிறார்கள். போதிய இட வசதி மற்றும் தண்ணீர் வசதி இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை ஒன்றை நிறுவ, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வி இயற்கை உரத்தைப் பற்றியது, ஆனால், நீங்கள் கரும்பைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இயற்கை உரம் பற்றிய கேள்வியாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்விப் போட்டால், அதற்குரிய பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

83—

வனச் சாலை வசதி

***7072—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், சிங்கம்பாளையம் முதல் சேர்க்கானூர் வரையுள்ள மலைக் கிராமங்களுக்கு சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், புங்கம்பட்டு நாடு, புதூர் நாடு, நெல்லிவாசல் நாடு ஊராட்சியிலுள்ள சிங்கம்பாளையம் முதல் சேர்க்கானூர் வரையுள்ள கிராமங்களுக்குச் சாலை அமைப்பதானால், ஆண்டியப்பனூர் காப்புக் காட்டின் வழியே அமைக்கப்பட வேண்டும். மேலும், இச்சாலை அமைக்க பயனீட்டாளர் துறையிடமிருந்து வனப் (பாதுகாப்புச்) சட்டம், 1980–ன்படி உரிய கருத்துரு பெறப்படும்பட்சத்தில், மத்திய அரசின் முன் அனுமதி பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இவ்வினா தற்பொழுது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவிலே தந்தை பெரியாராய், அன்பு காட்டுவதிலே பேரறிஞர் அண்ணாவாய், வள்ளல் தன்மையிலே, புரட்சித் தலைவராய், தெளிவான சிந்தனை உடையவராய், தீர்க்கமான முடிவு எடுப்பவராய், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி எங்கள் அம்மாவாய், ஒன்றரைக் கோடி கழகத் தொண்டர்களை ஒன்றிணைத்து, இராணுவக் கட்டுப்பாட்டுடன் கழகத்தை வழிநடத்திவரும், மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்று,*

2012 ஏப்ரல் 12]

தமிழக மக்களுக்கு நாளும் ஒரு திட்டம் தந்து, நல்லாட்சி நடத்திவரும், வாழும் மனித தெய்வம், வள்ளலின் ஒரே அரசியல் வாரிசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியத்திற்குட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்களின் நலன் கருதி, அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், சிங்கம்பாளையம்–சேர்க்கானூர் வரையில் 6 கிலோ மீட்டர் தூரம் உள்ள ஒற்றையடிப் பாதையை தார்ச் சாலையாக மாற்றித் தந்தால், சேர்க்கானூர், பெறும்பள்ளி, கல்லாவூர், சின்னவட்டானூர், கோயிலூர், கீழானூர், பேளூர், கொத்தனூர், தகரகுப்பம், பழையபாளையம், அரசமரத்துகொல்லை, கம்புகுடி, புதுகம்புகுடி, வசந்தபுரம், நடுவூர், ரங்கசமுத்திரம், குடகுமலை ஆகிய மலைக் கிராம மக்கள் 6 கிலோ மீட்டர் தூரத்தை எளிதில் கடக்க வசதியாக இருக்கும். இந்தப் பகுதியிலே படிக்கின்ற மாணவ, மாணவியர்கள் மேல்படிப்பிற்கு, மலைப் பகுதியிலிருந்து கீழே வந்து படிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் சிங்கம்பாளையம்–சேர்க்கானூர் வரையில், தார்ச் சாலை அமைத்துத் தந்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், புங்கப்பட்டி நாடு, புதூர் நாடு, நெல்லிவாசல் நாடு ஊராட்சிகளில் உள்ள சிங்கம்பாளையம் முதல் சேர்க்கானூர் வரையுள்ள கிராமங்களுக்குச் சாலை அமைக்க வேண்டுமானால், ஆண்டியப்பனூர் காப்புக் காட்டின் வழியே அமைக்க வேண்டும். இக்காப்புக்காட்டில் ஏற்கெனவே 3.2 கி.மீ. நீளம் மற்றும் 118 மீட்டர் அகலத்தில் அனுமதிக்கப்பட்ட வழித்தடம் உள்ளது. இவ்வழித்தடம் ஆண்டியப்பனூர் காப்புக் காட்டின் வழியாக 5 கி.மீ. நீளத்திற்கு அமைக்க ஆய்வுப் பணிகள்

மேற்கொள்ளப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, வனப் (பாதுகாப்புச்) சட்டம், 1980–ன்படி உரிய கருத்துரு கோரப்பட்டுள்ளது. தற்போது மேற்படி சாலை அமைக்கும் பணி பாரத் நிர்மாண் திட்டம் 3-ல் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உத்தேசித்துள்ளபடி காப்புக் காட்டிற்குச் செல்லும் சாலையின் தூரம் 7.7 சதுர கிலோ மீட்டராகும்; அகலம் 10 மீட்டர் ஆகும். சாலை அமைக்கத் தேவைப்படும் மொத்த வன நிலத்தின் பரப்பு 7.70 ஹெக்டேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சாலையை அமைக்க வனப் (பாதுகாப்புச்) சட்டம் 1980–ன்படி, மைய அரசின் முன்னனுமதி பெறவேண்டும். மேலும், இச்சாலையை அமைக்க நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து கருத்துரு அனுப்பினால், பரிசீலிக்கப்பட்டு, மத்திய அரசினுடைய முன்னனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

திருமதி ஆர். சாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், குண்டலிநாடு ஊராட்சி, வேலிக்காடு முதல் அடுக்கம்பாறையில் உள்ள மலைக் கிராமங்களுக்கு வனத் துறையின் மூலமாக 2 கிலோ மீட்டர் அளவிற்குச் சாலை வசதி ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய வனப் (பாதுகாப்புச்) சட்டம், 1980–ன்படி, வனப் பகுதியில் சாலை அமைக்கப்பட வேண்டுமானால், எந்த ஊராட்சி அல்லது நெடுஞ்சாலைத் துறை கோரிக்கை வைக்குமோ, அந்தத் துறை, சாலை அமைக்கத் தேவைப்படும் மொத்த நிலப்பரப்பைக் காட்டிலும் இரண்டு மடங்கு நிலத்தினை வனத் துறைக்கு வழங்குகின்றபட்சத்தில், அதற்கான விவரங்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து கொடுத்தால், மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று, சாலை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2012 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, திருக்குருங்குடி அருகிலுள்ள நம்பிக்கோயில் பிரசித்திபெற்ற கோயிலாகும். மேற்படி நம்பிகோயிலுக்குச் செல்லும் சாலை கற்சாலையாக இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு வந்து செல்வதால், அதைத் தார்ச் சாலையாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய வனப் (பாதுகாப்புச்) சட்டத்தின்படி, அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் மட்டும்தான் சாலை அமைக்க முடியும். மற்றபடி புதியதாகச் சாலை அமைக்க வேண்டுமானால், எந்தத் துறை, அந்தச் சாலையை அமைக்கின்றதோ, அந்தச் சாலை அமைக்கத் தேவைப்படும் நிலத்தினைவிட இரண்டு மடங்கு அளவுள்ள நிலத்தினை வனத் துறைக்கு அளிக்க முன்வந்தால், அங்கு சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மேற்கு தொகுதிக்குட்பட்ட குருவம்பட்டியில் வனத் துறைக்குச் சொந்தமான உயிரியல் பூங்கா உள்ளது. அங்கே அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால், அங்கே உள்ள தார்ச் சாலைகள் முற்றிலும் பழுதடைந்த நிலையில் உள்ளன. கொண்டப்பநாயக்கன்பட்டி முதல் குருவம்பட்டி வரை உள்ள வனத் துறைக்குச் சொந்தமான சாலையைப் புதுப்பித்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதியாண்டில்கூட, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 16.7 கோடி ரூபாய் செலவில், வனப் பகுதிகளில் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்றன. இந்த ஆண்டு நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கடையாலுமூடு பேரூராட்சி, வலியஏலா பகுதியில் 80 ஆண்டுகளாக மக்கள் வசித்து வருகிறார்கள். அங்கு சாலை வசதி மற்றும் அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரப்படாமல் உள்ளன. மின்சாரம் 75 வீடுகளுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கின்றன.. மேலும், 150 வீடுகளுக்கு மின்சார வசதியைப் பெறுவதற்கு மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில், அந்தப் பகுதியில் சாலை வசதி, மின்சார வசதி மற்றும் இதர அடிப்படை வசதிகளைச் செய்து தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய வனப் (பாதுகாப்புச்) சட்டம் 1980–ன்படியும், உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படியும், மத்திய வன உயிரின ஆணையம் அனுமதியின் பேரிலும், முன்னனுமதியுடன்தான் வனப் பகுதிகளில் சாலை அமைக்கின்ற பணியை மேற்கொள்ள முடியும். எந்தத் துறை அந்தச் சாலையை அமைக்க முன்வருகின்றதோ, அந்தத் துறை, சாலை அமைக்கத் தேவைப்படுகின்ற நிலத்திற்கு ஈடாக இரண்டு மடங்கு அளவுள்ள நிலத்தை வனத் துறைக்கு அளிக்க முன்வந்தால், மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.*

2012 ஏப்ரல் 12]

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Recognition of Forest Right Act *அமல் ஆகியிருப்பதால், மத்திய அரசாங்கத்தினுடைய சட்டமே, 1980 ஆம் ஆண்டு* Forest (Conservation) Act, quash *பண்ணப்பட்டு இருக்கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், தமிழ்நாடு முழுவதும் ஏற்கெனவே உரிமை பெற்றுள்ள அல்லது வனச் சாலைகள் போட அனுமதி பெற்றுள்ள பகுதிகளில்கூட சாலைகளைப் போடுவதற்கு வனத் துறை அனுமதி மறுக்கிறது. கோட்டப்பட்டியிலிருந்து தும்பலூர் வரை செல்லக்கூடிய சாலைக்கு 56 இலட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, ஆறு மாத காலமாக வனத் துறை அனுமதி மறுக்கிறது. இப்படி, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பகுதிகளில், உதாரணமாக தருமபுரியில், மிட்டாரெட்டி கோம்பூரிலிருந்து–பொம்மிடி செல்வதற்கு 1½ கிலோ மீட்டர் தூரம் சாலை வசதி செய்தால் 56 கிலோ மீட்டர் தூரம் செல்லக்கூடிய பயண நேரம் குறையும். இதெல்லாம் வனத் துறையில், மாவட்டத்தில் இருக்கக்கூடிய* DFO level, Conservator level*–ல் இருப்பவர்களாலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. இந்திய நாடு முழுவதும் சட்டம் அமல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு, உங்களுக்கு பலமுறை சொல்லிவிட்டேன். இதையெல்லாம், மானியக் கோரிக்கை விவாதத்தில் விளக்கமாகக் கேட்கலாமே தவிர, துணைக் கேள்வியில் இப்படிக் கேட்பதை அனுமதிக்க முடியாது.* Please sit down. *நான்* time manage *பண்ண வேண்டும்.* I am not allowing you, please sit down. *உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பினை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளவில்லை. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு, நீங்கள்* Act, Rules *பற்றியெல்லாம் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பேசுங்கள். கேள்வி நேரத்தின்போது மூலக் கேள்வியையொட்டி நீங்கள் கேள்வி கேட்டால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிப்பதற்குத் தயாராக இருப்பார்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொட்டமஞ்சி ஊராட்சியிலுள்ள பதினைந்திற்கும் மேற்பட்ட மலைக் கிராம மக்கள் 9 கி.மீ. தூரம் வனப் பகுதியிலே நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. 2006–2007 ஆம் ஆண்டு பாரத் நிர்மாண் பகுதி–1 திட்டத்திலே அந்தச் சாலையை அமைப்பதற்கு 2,67,00,000/– ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, டெண்டர் விட வனத் துறை அனுமதியளிக்கவில்லை. ஆகவே, மத்திய அரசின் அனுமதியைப் பெற்று அந்தச் சாலையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையை அமைப்பதற்கு எந்தத் துறை அனுமதி கோருகின்றதோ, அவர்கள் உரிய படிவங்களில் பூர்த்தி செய்து விண்ணப்பித்தால் மத்திய அரசினுடைய அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

84—

பால் விற்பனை நிலையம்

***6872—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, டி.வி.எஸ். குடியிருப்புப் பகுதியில் ஆவின் பால் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?